பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2051 | சித்திரை 02 | புதன்கிழமை 15.04.2020 | கதிர் 161

### இனி இது ரகசியம் அல்ல!

எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படாவிட்டால் அரசமைப்பு நெருக்கடிவரும் என்று கூறுகின்றார்களே. அப்படி என்ன நடக்கலாம்?

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின்படி ஒரு நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் பக்கம் 02 »

# யாழ்ப்பாணத்தில் மேலும் 8 பேருக்கு கொரோனா உறுதி!

## இங்கு இதுவரை 15 பேர் பாதிப்பு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.15

யாழ்ப்பாணத்தில் மேலும் 8 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 14 பேருக்கு நேற்று இரண்டாவது தடவையாகப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 8 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 15ஆக அதிகரித்துள்ளது. பக்கம் 02 »

# முழங்காவில் தனிமைப்படுத்தல் மையத்திலும் 4 பேருக்கு தொற்று

## பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 231ஆக உயர்வு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் நேற்று 24 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதில் 12 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் முழங்காவில் தனிமைப்படுத்தல் மையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 4 பேரும் பக்கம் 02 »

# முதல் 6 பேருடன் நெருக்கம் பேணிய 8 பேரே கண்டறிவு

## மாகாண சுகாதார பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 15

பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 20 பேரில் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டது. அதனால் 6 பேருடன் ஏனைய 14 பேரும் நெருங்கிப் பழகியிருந்தமையால் அவர்களுக்கு இரண்டாவது தடவை சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். பக்கம் 02 »

# யாழில் சில பகுதிகள் முடக்கப்பட வாய்ப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்ப்பாணத்தில் மேலும் 8 கொரோனா நோயாளர்கள் நேற்று இனங்காணப்பட்டுள்ள நிலையில் சில பகுதிகள் மீண்டும் முடக்கப்பட பக்கம் 02 »

# யாழுக்கு எடுத்து வந்த பரிசோதனைக்கான 200 'கிற்'றுகள் சேதம்?

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றைச் சோதிப்பதற்காக எடுத்து வரப்பட்ட 200 'கிற்று'கள் அது எடுத்து வந்த முறைமையில் ஏற்பட்ட பக்கம் 02 »

### குறைந்த பக்கங்களுடன் இன்று 'காலைக்கதிர்'

புதுவருடப் பிறப்புத் தினமான நேற்று வழமை போல 'காலைக்கதிர்' நிறுவன ஊழியர்களுக்கு விடுமுறை. அதனால் நேற்று அறிவிக்கப்பட்டபடி இன்று 'காலைக்கதிர்' குறைந்த பக்கங்களுடனேயே வெளியாகின்றது. வாசகர்கள் பொறுத்துக் கொள்ளவார்களாக!

–நிர்வாகம்–

# தனிமைப்படுத்தல் முடிந்தவர்களின் வீடுகளில் ஆய்வு!

கொழும்பு, ஏப்.15

தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள் தொடர்பாக பக்கம் 02 »

# யாழ்ப்பாணத்தை அழிவிலிருந்து காத்தது வடக்கு சுகாதாரத்துறை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஏப்.15

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், தன் கீழே உள்ள சிறந்த சுகாதாரக் கட்டமைப்பைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் 15 தொற்றாளர்களுடன் கொரோனாவை கட்டுப்படுத்தியுள்ளார். சுகாதாரத் துறையின் சேவை, யாழ்ப்பாணம் சமூகம் இன்று பெரும் சேதத்தைத் தடுக்கப் பங்களித்தது என்றால் மிகையாகாது.

– இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் மருத்துவர் தங்கராஜா காண்டீபன் பாராட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மாகாண பக்கம் 02 »

# யாழ்ப்பாணத்துக்கு ஆபத்து!

யாழ்ப்பாணம், ஏப்.15

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தாலும், அது மீண்டும் பரவுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடக சந்திப்பை நடத்திய வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமை குறித்து தெளிவுபடுத்தினார்.

இதன்போதே அவர், கொரோனா வைரஸ் பக்கம் 02 »

# ரிஷாத்தின் சகோதரர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.15

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் பற்றிய விசாரணைகளுக்காக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இளைய சகோதரர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நேற்று மாலை பொலிஸார் தெரிவித்தனர்.

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறன்று நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் குற்ற விசாரணைப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா பக்கம் 02 »

### சுமுக நிலைமை வருவதற்கு முன்னர்

# தேர்தல் அறிவித்தால் உடனடியாக வழக்கு!

## அடிப்படை உரிமை மீறல் மனு உயர்நீதிமன்றில் தாக்கலாகும்

கொழும்பு, ஏப்ரல்.15

கொரோனாத் தொற்றுப் பரவல் முற்றாக நீங்குவதற்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை சுயாதீன தேர்தல் ஆணையமோ அல்லது ஜனாதிபதியோ விடுத்தால் அதற்கு எதிராக உடனடியாக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு வைத் தாக்கல் செய்து அந்த முயற்சியை சட்ட ரீதியாகத் தடுப்பதற்கான முழு ஆயத்தத்தில் கொழும்பில் சிரேஷ்ட சட்ட வட்டாரங்கள் இருக்கின்றன என மிக நம்பகரமாக அறியவந்தது. பக்கம் 02 »

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5 ஆண்டுகள். அதில் நான்கரை ஆண்டுகள் கழிந்த பின்னர் எந்தச் சமயத்திலும் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட முடியும்.

இப்படி முற்கூட்டியே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் போது மட்டுமே புதிய நாடாளுமன்றத்துக்கான தேர்தலை நடத்தும் திகதியையும் புதிய நாடாளுமன்றம் கூடுவதற்கான திகதியையும் நிர்ணயித்து அறிவிக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு வருகின்றது.

அது சம்பந்தமாக அரசமைப்பில் இரண்டு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

70 (5) இலும் 70 (7) இலும் இது குறிப்பிட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் ஜனாதிபதியின் பிரகடனம், கலைக்கப்படும் அத்திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்கு மேற்பாடத ஒரு திகதியில் புதிய நாடாளுமன்றம் கூடுவதைப் பற்றிய அறிவித்தலையும் கொண்டிருக்க வேண்டும் என்று 70 (5) பிரிவு கூறுகின்றது.

தப்பித் தவறி புதிய நாடாளுமன்றம் கூடுவதற்கான அத்திகதியை மாற்றும் புதிய பிரகடனம் ஒன்று வெளியிடப்படும் என்றால், அந்தப் புதிய திகதி கூட, மூலப் பிரகடனத்தில் இருந்து மூன்று மாத காலத்துக்கு மேற்படாததாக இருப்பதை உறுதிப்படுத்துவதாக அமைய வேண்டும் என்று 70 (7) பிரிவு கூறுகின்றது.

அதாவது நாட்டில் நாடாளுமன்றம் இல்லாத ஒரு நிலைமை எந்தக் காரணம் கொண்டும் மூன்று மாத காலத்தைத் தாண்டக் கூடாது என்பதுதான் அரசமைப்பின் கட்டாய விதியாக உள்ளது.

அந்த நிபந்தனையின் அடிப்படையில் தான் – அதாவது நாட்டில் நாடாளுமன்றம் ஒன்று செயற்படாத நிலைமை மூன்று மாதங்களுக்கு அதிகப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதன் அடிப்படையில்தான் – நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இதுவே, 70 (5) மற்றும் 70 (7) பிரிவுகளின் அடிப்படையில் சட்ட நிபுணர்கள் கூறும் அரசமைப்பு வியாக்கியானமாகும்.

ஆகவே, அந்த நிபந்தனையை ஜனாதிபதி நிறைவு செய்யத் தவறினால், அதனடிப்படையில் நாடாளுமன்றத்தைக் கலைத்த உத்தரவும் சட்டரீதியாகச் செல்லுபடியற்றதாகி விடும் என்பதே அவர்களின் கருத்து.

அதாவது இப்போதைய நிலையில், மார்ச் 2 ஆம் திகதி கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் இடத்துக்கு ஜுன் 2 ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடாவிட்டால், மார்ச் 2ஆம் திகதி பழைய நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதியின் உத்தரவு – அதற்குரிய நிபந்தனையை அது நிறைவு செய்யாத காரணத்தினால் – செயலிழந்து போக, பழைய நாடாளுமன்றம் தன்பாட்டில் சட்டரீதியான செயற்பாட்டுக்கு வரும் என்பதே அந்த சட்ட விற்பன்னர்களின் கருத்து.

அந்த அடிப்படையில் உயர்நீதிமன்றத்தின் உத்தரவு ஒன்றைப் பெற்று, ஜனாதிபதிக்கு அதனை அறிவிக்கச் செய்வதன் மூலம் பழைய நாடாளுமன்றத்தை மீளக் கூட்டலாம் என்பது அந்த சட்ட வல்லுநர்களின் தீர்மானம்.

சரி. அத்தகைய வழக்கு ஒன்றை இலங்கையின் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தீர்ப்பு ஒன்றைப் பெறுவதற்கு, புதிய நாடாளுமன்றம் ஜுன் 2ஆம் திகதிக்கு முன்னர் கூடவில்லை என்பதை உயர்நீதிமன்றத்துக்குக் காட்ட வேண்டும் அல்லவா?

அதற்காக அத்தகைய வழக்கைத் தாக்கல் செய்வதற்கு ஜுன் 2 வரை காத்திருக்க வேண்டுமா? எப்போது அந்த வழக்கைத் தாக்கல் செய்யலாம்?

நாளை இப்பத்தியில் அந்த விடயத்தைப் பார்ப்போம்.

–மின்னல்–

## யாழ்ப்பாணத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் பரவுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதால், பொது மக்கள் சுகாதாரப் பரிசோதகர்களின் ஆலோசனைகளைத் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

## ரிஷாத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மேற்படி விடயம் தொடர்பாகக் கடந்த மாத இறுதியில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த விசாரணைகளின் தொடர்ச்சியாக ரிஷாத் பதியுதீன், புத்தளத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ்ப்பாணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதாரப் பணிப்பாளர் தலைமையில் உண்மையில் நாம் (சுகாதாரத்துறை) அனைவரும் எமது சமூகத்திற்கு ஏதாவது நல்லது செய்தோம் எனப் பெருமை கொள்ளக்கூடிய நிலையில் யாழ்ப்பாணத்தைக் கொரோனா தொற்றில் இருந்து கட்டுப்படுத்தி வைத்துள்ளோம்.

மத போதகருடன் நெருங்கிப் பழகியவர்களை சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் சேர்ந்து தொடர்புகளை விரைவாகக் கண்டுபிடித்ததும், இந்தத் தொடர்புகளை தனிமைப்படுத்தி ஊரடங்கு உத்தரவை நீட்டியதுமே இதற்கு க்காரணமாகும்.

யாழ்ப்பாணச் சமூகத்துக்கு ஏற்பட இருந்த பெரும் சேதத்தைத் தடுக்க இவை பங்களித்தன என்றால் மிகையாகாது.

ஆயினும் இன்று தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுயதனிமைப்படுத்த வேண்டும். அவர்களுக்கும் கொரோனா நோய் இருப்பதைக் கண்டுபிடிக்கப் பரிசோதனைகள் செய்யப்படவேண்டும்.

மேலும் மதகுருவுடன் நெருங்கிப் பழகிய அனைவருக்கும் மீளப் பரிசோதனைகள் செய்யப்பட வேண்டும்.

உலக சுகாதார நிறுவனம் கூறியபடி மூன்று தடவைகளாவது செய்யவேண்டும். முதல் தொடர்புடையவர்களை மட்டுமல்ல இரண்டாம், மூன்றாம் தொடர்புடையவர்களையும் பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு தளர்த்துவது தொடர்பில் மாகாணப் பணிப்பாளர் தனது ஆளணியினருடன் முடிவை மீளாய்வு செய்தல் வேண்டும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம் மீள் ஆரம்பிக்கும் திகதியையும் மீளாய்வு செய்தல் வேண்டும். 12 நாள்களின் பின்னர் இன்று தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் இதற்குக் காரணம். நாங்கள் அதிகளவிலான பரிசோதனைகளை செய்யாமலும், பரிசோதனை செய்து தொற்றில்லாதவர்களை மீள பரிசோதிக்காமையுமே காரணமாகும்.

பலாலியில் இருந்த 14 பேருக்கும் 12 நாள்களின் பின்னரே இப்பரிசோதனைகள் செய்யப்பட்டன.

இதனால் வைத்தியசாலைகளில் மீண்டும் அவசியமற்ற சேவைகளை ஆரம்பிக்கும் போது உள்ள ஆபத்துக்களைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

ஆகையினால் நாள் ஒன்றில் செய்கின்ற பரிசோதனைகளை அதிகரிப்பதற்கான வழிவகைகளை ஆராய்தல் இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாகும் – என்றுள்ளது.

## முழங்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடங்கியுள்ளனர்.

இதன்மூலம் நாட்டில் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை 231ஆக உயர்வடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் பலாலி தனி மைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 14 பேரின் மாதிரிகள் ஆய்வு கூடப் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவர்களில் 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அத்துடன், முழங்காவில் கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ராகமையைச் சேர்ந்த 8 பேரின் மாதிரிகளும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அவர்களில் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதேசமயம் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தவர் உட்பட 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஆபத்து முற்றாக நீங்குவதற்கு முன்னர் தனது அரசியல் இலக்கை எட்டுவதற்காக அவசரப்பட்டுப் பொதுத் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு ஆட்சித் தலைமை தயாராக இருக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

அப்படி முயற்சி எடுக்கப்பட்டால் அதற்கு எதிராக நாட்டின் மூத்த வைத்திய நிபுணர்கள் மற்றும் மருத்துவத்துறையில் துறை தோய்ந்த கலாநிதிகளின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்து அந்த முயற்சியை முறியடிப்பதற்கான ஆயத்த நிலையில் சட்ட வட்டாரங்கள் சில தயாராக இருக்கின்றன.

இதற்கான மனுவுக்குரிய நகல் வடிவங்கள் கூட சட்டத்துறையினால் இறுதி செய்யப்பட்டு விட்டன என்றும் –

பொதுத் தேர்தல் திகதி அறிவிப்பு விவகாரத்தில் தேர்தல் ஆணையத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்பை எதிர்பார்த்து அந்த வட்டாரங்கள் காத்திருக்கின்றன என்றும் – கூறப்பட்டது.

இந்த வழக்குகளில் மனுதாரர்களாகப் பெயர் குறிப்பிடப்படவிருக்கும் மருத்துவ நிபுணர்கள், விசேட வைத்தியர்கள் ஆகியோருக்கும் சட்ட நிபுணர்களுக்கும் இடையிலான விரிவான காணொலி உரையாடல் ஆலோசனை, கருத்துப் பரிமாற்றம் யாவும் சுமுகமாக நடந்து முடிந்திருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

பொதுத் தேர்தலை மே 23 அல்லது மே 30ஆம் திகதி நடத்துவதற்கு அரசுத் தரப்பால் முயற்சி எடுக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது. அப்படி அத்திகதியில் நடத்துவதாயின், அதற்கு முன்னர், வேட்பு மனுத்தாக்கல் செய்த தரப்புகளுக்கு மாவட்ட ரீதியாக வேட்பாளர் இலக்கங்கள் ஒதுக்கப்பட்டு, அதன் பின்னர் ஐந்து வாரங்கள் பிரசாரத்துக்கு இடமளிக்கப்பட வேண்டும்.

அப்படிக் கொடுப்பதாயின் மே 23 இல் தேர்தல் நடத்துவதாயின் குறைந்தபட்சம் நாளை மறுதினமும் –

மே 30ஆம் திகதி தேர்தல் நடத்துவதாயின் குறைந்த பட்சம் வரும் 24 ஆம் திகதிக்கு முன்னரும் –

தேர்தல் நடத்துவது பற்றிய அறிவிப்பை விடுக்க வேண்டியிருக்கும்.

கொரோனாத் தொற்று ஆபத்து நீங்குவதற்கு முன்னர் இந்தத் தேர்தல் அறிவிப்பு விடுக்கப்படுமானால் அது குறித்து நிபுணத்துவ ரீதியான ஆதாரங்களோடு வழக்குத் தொடுத்து, அந்த முயற்சிக்கு எதிராக தடை உத்தரவு வாங்கவும்,

இந்த விடயத்தை ஒட்டி எழக் கூடிய அரசமைப்புச் சிக்கலைத் தவிர்ப்பதற்காக, கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டும்படியான உத்தரவை ஜனாதிபதிக்கு வழங்குமாறு கோரும் ஒரு விண்ணப்பத்தையும் அந்த மனுவில் சேர்த்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என அறிய வந்தது. (உ)

## தனிமைப்படுத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பதில் பொலிஸ்மா அதிபரால் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்கள், வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட நிலையில், பின்னர் அவர்களை மேலும் இரு வாரங்கள் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவறு காரணமாக பயன்படுத்த முடியாமல் சேதமடைந்து விட்டன என்று உள்வீட்டு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

யாழ்ப்பாணத்தில் இதுவரை சுமார் 250 பேருக்கே இங்கு கொரோனாத் தொற்றுப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு இரத்த மாதிரிக்கும் செய்யும் போது புதுப் புது 'கிற்'றுகளைப் பாவிக்க வேண்டும் என அந்த வட்டாரம் தெரிவித்தது.

விலை உயர்ந்த இந்த உபகரணம் கிடைப்பதில் உள்ள தாமதமும் இப்பரிசோதனைகளை தாராளமாக இங்கு செய்ய முடியாமைக்குக் காரணம் எனவும் கூறப்பட்டது.

இந்த வகையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அம்புலன்ஸில் இந்தக் கருவிகளை குளிரூட்டப்பட்ட முறையில் எடுத்து வருகையில், அதற்குரிய பொதியில் அது எடுத்து வரப்படாமையால் அந்த 200 'கிற்'றுகளும் பயன்படுத்த முடியாமல் சேதமடைந்து விட்டன என்று அந்த வட்டா ரம் தெரிவித்தது.

எனினும், சேதமடைந்தமைக்கு மாற்றீடான உபகரணங்கள் உடனடியாக யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவ்வட்டாரம் குறிப்பிட்டது. (உ)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடத்தில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் இவர்களுக்கு கொரோனா உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரியாலை பகுதியில் உள்ள தேவாலயத்தில் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி ஆராதனை நடத்திய சுவிஸ் போதகரோடு நெருக்கமான தொடர்புடைய 20 பேர் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி தங்க வைக்கப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் கடந்த ஏப்ரல் முதலாம், மூன்றாம் திகதிகளில் முதல்கட்டப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது மானிப்பாயைச் சேர்ந்த போதகர் ஒருவர் உட்பட 6 பேருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டு வெலிகந்தை ஆதார வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

நேற்று மிகுதியாக இருந்த 14 பேருக்கு இரண்டாம் கட்டப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் 8 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## முதல் 6 பேருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் 8 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

– இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரியாலை தேவாலயத்தில் சுவிட்ஸர்லாந்திலிருந்து வருகை தந்த போதகரால் கடந்த மார்ச் 15ஆம் திகதி நடத்தப்பட்ட ஆராதனையில் பங்கேற்றவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

சுவிஸ் போதகருடன் நெருக்கமாகப் பழகிய மானிப்பாயைச் சேர்ந்த போதகர், சுவிஸ் போதகரின் சாரதி உள்ளிட்ட அரியாலை மற்றும் மானிப்பாயைச் சேர்ந்த 20 பேர் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கடந்த மார்ச் 23ஆம் திகதி நிறுவன தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்கள் 20 பேரிடமும் ஏப்ரல் முதலாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் மாதிரிகள் பெறப்பட்டு முதல்கட்ட பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் மானிப்பாயைச் சேர்ந்த மதபோதகர் உட்பட 6 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. அவர்கள் 6 பேரும் வெலிகந்தை வைத்தியசாலை கொரோனா சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டனர்.

இந்த நிலையில் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்ட ஏனைய 14 பேருக்கு நோய் அறிகுறி இல்லாதபோதும் முதல் கட்டத்தில் அடையாளம் காணப்பட்ட 6 பேருடன் நெருக்கமாக இருந்தவர்கள் என்ற அடிப்படையில் நேற்று செவ்வாய்க்கிழமை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த நிலையில் 14 பேரில் 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

8 பேரும் வெலிகந்தை வைத்தியசாலைக்கு மாற்றப்படுவார்கள். ஏனைய 6 பேரும் தொடர்ந்து பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் நிலையத்தில் தங்கவைக்கப்படுவார்கள் – என்றார்.

## யாழில் சில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்புள்ளதாகத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரத்தில் அப்பகுதியில் உள்ள பலரிடம் அடுத்துவரும் நாள்களில் விரைந்து கொரோனாத் தொற்றுக்கான சோதனைகள் நடத்தப்பட வாய்ப்புகள் இருக்கின்றன.

கொரோனா பாதித்த நோயாளிகள் யாழ்ப்பாணத்தில் நீண்ட நாள்களின் பின்னர் இனங்காணப்பட்டு வருகின்றமை காரணமாக அது பரவுவதற்குச் சந்தர்ப்பம் உள்ளதாகக் கருதப்படுகிறது. இதனால் இனங்காணப்பட்டுள்ள பகுதிகளை பாதுகாப்புக் கருதி மீண்டும் முடக்குவது குறித்து உயர்மட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. அநேகமாக இந்த முடிவு இன்று எடுக்கப்படலாம் எனக் கூறப்பட்டது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுதல்

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஜனாதிபதி மீளக் கூட்டுவது தொடர்பில் பல்வேறு தரப்பினரும் வேறுவேறான கருத்துக்களைக் கூறிவருகின்றனர்.

இது விடயத்தில் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே மயக்கமான தொனியில் – வாசகத்தில் – சில விடயங்களை முன் வைத்திருக்கின்றமை அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

அதனுடைய ஆயுள்காலம் தானாகப் பூர்த்தியடைய முன்னர் ஒரு நாடாளுமன்றத்தை ஜனாதிபதி தமக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி முற்கூட்டியே கலைத்தால், அந்த நாடாளுமன்றம் மீளக் கூடுவதற்கான வாய்ப்புகளை நாம் மூன்று பிரிவுகளாகப் பார்க்க முடியும்.

இவ்வாறு நாடாளுமன்றம் முற்கூட்டியே கலைக்கப்பட்ட நிலையில் –

நாட்டில் அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்படுமானால், அந்த அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பிக்கும் உத்தரவே, கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் அடுத்த பத்து நாள்களுக்குள் கூட வேண்டும் என்பதற்கான அறிவித்தலாக அமையும் என 'பொதுசனப் பாதுகாப்பு' என்ற தலைப்பின் கீழான அரசமைப்பின் 155 ஆவது பிரிவு கூறுகின்றது.

அப்படி மீளக் கூடுகின்ற நாடாளுமன்றம், அந்த அவசரகாலச் சட்டம் விலக்கப்படும் போது அல்லது பொதுத்தேர்தல் நடந்து முடிவுகள் அறிவிக்கப்படும்போது – இதில் எது முதல் நடக்கின்றதோ அதுவரையில் – செயற்பாட்டில் இருக்கும் என்பதுதான் அந்த ஷரத்தில் கூறப்பட்டுள்ளது.

இப்போதைய நிலையில் கொரோனாப் பிரச்சினை இவ்வளவு நெருக்குதல் கட்டத்தை அடைந்த பின்னரும் கூட அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி பிரகடனப்படுத்தாமல் இருப்பதற்கு அதுதான் காரணம். அவசரகாலச் சட்டத்தை அறிவித்தால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் தானாகவே மீளச் செயற்படத் தொடங்கிவிடும் என்பதால், அதற்கு இடமளிக்காமல் இருப்பதற்காக அவசர காலச் சட்டத்தைப் பிடகடனப்படுத்தாமலேயே, முப்படை மற்றும் பொலிஸ் மீதான தனது இயல்பான இராணுவ மேலாதிக்கப் போக்கை வைத்து காய்களை நகர்த்தி வருகின்றார் அவர்.

நாடாளுமன்றம் மீளக் கூடுவதற்கான முதல் முறைமை இது.

அடுத்தது – அரசமைப்பின் 70 (7) பிரிவில் கூறப்பட்டுள்ளது. நாட்டுக்கு நெருக்கடியான நிலைமை ஒன்று ஏற்பட்டால் அந்த நிலைமை சம்பந்தமான விடயத்தைக் கையாள்வதற்காக, ஏற்கனவே கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஜனாதிபதி மீளக் கூட்ட முடியும் என்கின்றது இப்பிரிவு.

எதற்காக ஜனாதிபதி இந்தப் பிரிவின் கீழ் நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுகின்றாரோ அந்த விடயம் முடியும் வரை அல்லது பொதுத் தேர்தல் முடியும் வரை – இதில் எது முதல் நடைபெறுகின்றதோ அது வரை – மீளக் கூட்டப்பட்ட நாடாளுமன்றம் செயற்பாட்டில் இருக்க வேண்டும் என்கின்றது இப்பிரிவு.

இந்தப் பிரிவின் கீழும் நாடாளுமன்றத்தை மீளக் கூட்ட விரும்பாத ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, இந்தப் பிரிவும் அவசர கால நிலைமை குறித்துப் பேசுவதாக பிரஸ்தாபிக்கின்றார். அத்தகைய அவசரகால நிலைமை (Proclamation of Emergency) அறிவிப்பதற்கான தேவை கொரோனாவை ஒட்டி வரவில்லை என்பது அவர் வெளிப்படுத்திய கருத்து. ஆனால் இந்தப் பிரிவு அவசரகால நிலைமைப் பிரகடனம் குறித்துப் பேசவில்லை. அது உண்மையில் நாட்டுக்கு ஒரு நெருக்கடி ஏற்படுவது குறித்தே பேசுகின்றது. An emergency has arisen of such a nature என்ற சொற்றொடரே அரசமைப்பில் பயன்படுத்தப்படுகின்றது. அரசமைப்பின் தமிழாக்கத்தில் இது 'நெருக்கடி' என்றே குறிப்பிடப்படுகின்றது. 'அவசரகாலப் பிரகடனம்' என்றல்ல.

இப்பிரிவின் கீழ் நாடாளுமன்றத்தை மீளக் கூட்டும் அவசியம் இன்று உள்ளமையை உணர்ந்துள்ள ஜனாதிபதி தரப்பு, அதனால் இது நாட்டுக்கு நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளமை குறித்து பேசவில்லை என்ற தொனியிலும், அது அவசரகாலப் பிரகடனத்தை ஒட்டி நாடாளுமன்றம் கூட்டப்படுவதையே குறிக்கின்றது என்ற பாணியிலும் –

சளாப்பல் கருத்துக் கூறி சமாளிக்க முயல்கின்றது.

இது இரண்டாவது.

அடுத்தது நாடாளுமன்றத்தைக் கலைத்தமை தொடர்பான தனது பிரகடனத்தை ஜனாதிபதி வாபஸ் வாங்கினாலும் நாடாளுமன்றம் மீளவும் கூடமுடியும். தனது பதவிக்காலமான ஐந்து ஆண்டுகள் வரை – அதாவது வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை – இன்னமும் நாலரை மாதங்கள் – அது செயல்பாட்டில் இருக்க முடியும்.

எனினும், இப்படித் தம்மால் கலைத்த நாடாளுமன்றத்தை அதை வாபாஸ் பெறுவதன் மூலம் ஜனாதிபதி மீளக் கூட்டலாம் என்று எந்தச் சட்டப் பிரிவிலும் கூறப்படவில்லை.

ஆனாலும், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் இன்னமும் நடத்தப்படாத நிலையில் –

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனத்தை வெளியிடும் ஜனாதிபதிக்கு அதை வாயால் பெறும் உரிமையும் இருக்கின்றது என சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்த மூன்று வகையிலும் எதைப் பின்பற்றியும், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய தயாரில்லை என்பதுதான் இலங்கைத்தீவின் துரதிஷ்டம்.

# மந்திகை மருத்துவமனை டாக்டர்கள் திரும்பவும் போராட்டத்துக்கு முஸ்தீபு

## இடமாற்றம் வழங்கப்பட்ட பணிப்பாளர் பொறுப்புக்களைக் கையளிக்காதமையால்

பருத்தித்துறை,ஏப்.15

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளராகக் கடமையாற்றும் வைத்தியர் த.குகதாசனிற்கு இடமாற்றம் வழங்கியும் நேற்று மாலை வரை அவர் பொறுப்புக்களை கையளிக்கவில்லை. இதனால் ஆவணங்களையும், சாட்சிகளையும் திரிவுபடுத்தும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளாரோ என்ற சந்தேகம் தமக்கு ஏற்பட்டுள்ளதென பருத்தித்துறை வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கக் கிளை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று மாலை அந்த கிளை அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் -

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசன் மத்திய அரசாங்க உத்தரவுக்கமைய ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு வசதியாகவும், விசாரணைகளில் அவரது தலையீடுகளை தவிர்ப்பதற்காகவும் உடனடியாகப் பொறுப்புக்களை பதில் வைத்திய அத்தியட்சகரிடம் கையளித்து யாழ் பிராந்திய சுகாதார பணிமனையில் இணையுமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் இன்று(நேற்று) பணிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் நேற்று மாலை வரை பொறுப்புக்களை கையளிக்கவில்லை. இதனால் அவர் ஆவணங்களையும் சாட்சிகளையும் திரிவு படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளாரோ என எமக்கு பலமான சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

நாளை (இன்று) காலை 8.30 மணிக்கு முன்பாக பதில் பணிப்பாளர் தனது பதவியை பொறுப்பேற்க வேண்டும். தவறும் பட்சத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததொன்றாகிவிடும் எனக் குறிப்பிட்டுள்ளது.

# தேர்தல்கல் ஆணையத்துடன் பேசத் தயாராகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப்ரல் 15

கொரோனா வைரஸ் பரவிவரும் நிலையில், பொதுத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாட நேரமொதுக்கித் தருமாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க, தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்தக் கடிதம் நேற்றுஅனுப்பி வைக்கப்பட்டது.

கொரோனா வைரஸின் பாதிப்பு, அதன் சமூகத் தாக்கம் மற்றும் அதைக் கட்டுப்படுத்த எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து தேர்தல் ஆணையத்துடன் கலந்துரையாட வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

எனவே, இந்த பிரச்சினையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையத்துடன் கலந்துரையாட விரைவான திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கித் தருமாறு ஜே.வி.பி. த்லைவர் கோரியுள்ளார்.

# ஜே.வி.பி.ஏற்பாட்டில் யாழில் உலர் உணவு நிவாரணங்கள்





கொரோனா வைரஸ் பரவலை ஒட்டிப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கால் பாதிக்கப்பட்டுள்ளன

சுமார் 250 குடும்பங்களுக்கு மொத்தம் சுமார் 2லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவு நிவாரணப் பொருள்கள் புத்தாண்டு பிறந்துள்ள நேற்றைய தினம் ஜே.வி.பியின் யாழ் மாவட்ட ஆதரவுத் தரப்பினரால் வழங்கப்பட்டன.

வட்டுக்கோட்டை, அராலி, யாழ் சோனகத் தெரு, கொக்குவில், யாழ் நகரம், திருநெல்வேலி (பால் பண்ணை),மானிப்பாய், எழுதுமட்டுவாழ், மீசாலை ஆகிய பிரதேசங்களில் உள்ள குடும்பங்களுக்கே இந்த உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சூரியசேகரம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வட மாகாண அமைப்பாளர் புயல்நேசன், மாஹீர, ரொரின்டன். ஆகியோரும் கலந்துக்கொண்டனர் என ஜே.வி.பியின் யாழ் அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரம் தெரிவித்தார்.

இந்த உலர் உணவுப் பொதிகளுக்கான உதவியை கனடா நாட்டு தேசிய புத்திஜீவிகள் அமைப்பு நன்கொடையை வழங்கியிருந்தது. அதேபோன்று யாழ் மாவட்ட தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் தோழர் சூரிய சேகரத்தின் நன்கொடையும் இந்த ஏற்பாட்டுக்குப் பெரும் உந்துசக்தியாக அமைந்திருந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

**நாளை**
**16.04.2020**
**வியாழக்கிழமை**
நட்சத்திரம்: திருவோணம் பி.இ 2.51
திதி : நவமி மு.இ 10.33
இராகுகாலம் : 1.34 - 3.04
சுப நேரம் : 7.34 - 9.04

# ஊரடங்கை விரைவில் தளர்த்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப் திட்டம்



அமெரிக்காவில் பல்வேறு மாகாணங்களில் நடைமுறையில் உள்ள ஊரடங்கு முடக்கத்தை விரைவில் நீக்கும் வகையில் முழுமையான திட்டம் ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்று அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கரோனா வைரஸின் மையப்பிடிக்குள் சிக்கி அமெரிக்கா நாள்தோறும் ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்துவருகிறது, லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாளாந்தம் பல்லாயிரக்கணக்கானோர் தொற்றுக்குள்ளாகி வருகின்றனர்.

கொரோனா பாதிப்பிலிருந்து அந்த நாடுமுழுமையாக மீளவில்லை. இது போன்ற நேரங்களில் லாக்டவுனை நீக்குவதே ஆபத்தானது, அதிலும் பாதிப்பில்லாத இடங்களில் கூடப் படிப்படியாகவே நீக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பு விடுத்த எச்சரிக்கையை அதிபர் ட்ரம்ப் கண்டுகொள்ளாமல் பேசியிருக்கிறார்.

கொரோனா வைரஸின் ஆபத்துகள், வீரியம் ஆகியவை குறித்து ஜனவரி மாதத்திலிருந்து உளவுத்துறை, மருத்துவ உளவுத்துறை, வெள்ளை மாளிகை அதிகாரிகள் அனைவரும் எச்சரிக்கை செய்தும் அதிபர் ட்ரம்ப் மெத்தனமாக செயல்பட்டார் என்று தி நியூயோர்க் டைம்ஸ் உள்ளிட்ட முன்னணி ஊடகங்கள் குற்றம் சாட்டி வருகின்றன.

இதில் தி நியுயார்க் டைம்ஸ் நாளேடு புலனாய்வு செய்து கடந்த வாரம் பெரிய செய்தியும் வெளியிட்டது. அமெரிக்காவின் பொருளாதாரத்தின் நலன் மீதுதான் ட்ரம்ப் அக்கறை வைக்கிறார், மக்கள் மீது அல்ல என்று நாளேடுகள் குற்றஞ்சாட்டியதை ட்ரம்ப் செயல்கள் உறுதிப்படுத்துகின்றன

பொருளாதாரம் முடங்கிக் இருப்பதை அதிபர் ட்ரம்ப் விரும்பவில்லை. மக்களின் உயிர்களைக் காட்டிலும் பொருளாதாரத்தை இயக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார் என்ற சந்தேகத்தை உருவாக்கும் வகையில் வெள்ளை மாளிகையில் அதிபர் ட்ரம்ப் செய்தியாளர்களுடனான சந்திப்பு இருந்தது. அவர் கூறியதாவது:

பல வல்லுநர்களுடனும், என்னுடைய குழுவுடனும் நான் ஆலோசனை நடத்தினேன். அமெரிக்காவில் விதிக்கப்பட்டுள்ள முடக்கத்தை நீக்குவதற்கான முடிவெடுப்பதில் நெருங்கிவிட்டோம். அதற்கான திட்டங்களை வகுத்து வருகிறோம், மே மாதம் முதல்வாரத்தில் அமெரிக்கா முழுமையாக திறக்கப்படும்.

மாகாணங்களை பாதுகாப்பாக நிர்வாகம் செய்வது, கொரோனாவிலிருந்து பாதுகாக்கும் வழிகாட்டி நெறிமுறைகள் எப்படி என வகுக்கப்பட்டு ஆளுநர்களுக்கு வழங்கப்படும். என்னுடைய நிர்வாகத்தின் திட்டமிடல் அமெரிக்க மக்களுக்கு நிச்சயம் நம்பிக்கையைத் தரும், இயல்பு வாழ்க்கைக்கு மக்கள் திரும்புவது அவசியம் எனத் தெரிவித்தார்.

## 45 ஆயிரம் கைதிகளை விடுவிக்கிறது துருக்கி

சிறைக் கைதிகளிடையே கொரோனா தொற்று ஏற்படுவதைத் தடுக்கும் விதமாக, 45,000க்கும் மேற்பட்ட சிறைக் கைதிகளை தற்காலிகமாக விடுவிக்க வழிசெய்யும் சட்ட வரைவு துருக்கி நாடாளுமன்றத்தில் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த வரைவுக்கு 279 உறுப்பினர்கள் ஆதரவும் 51 உறுப்பினர்கள் எதிர்ப்பும் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உலகளாவிய நாடுகளின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. பெரும்பாலான நாடுகள் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளன.

மேலும், நோய்த் தொற்றைத் தவிர்க்க சமூக இடைவெளியை வலியுறுத்தி வருகின்றன. இந்த நிலையில் சிறைச்சாலைகளில் கைதிகள் நெருக்கடி, போதிய சுகாதார வசதிகள் இல்லாத காரணத்தால்அங்குமிகஎளிதில்கொரோனா தொற்று ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன. இச்சூழலைக் கருத்தில் கொண்டு ஈரான் அரசு மார்ச் மாதத் தொடக்கத்திலேயே 70 ஆயிரம் கைதிகளை விடுவித்தது.

வேறு சில நாடுகளும் சிறைக் கைதிகள் தொடர்பாக புதிய விதிகளை இயற்றின. இந்த நிலையில் தற்போது துருக்கி அரசு, அதன் சிறைச்சாலைகளில் நெருக்கடியைக் குறைக்கும் விதமாகவே இந்தப் புதிய சட்ட வரைவுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்தப் புதிய சட்டத்தின்படி குறிப்பிட்ட பிரிவில் கைது செய்யப்பட்டுள்ள 45 ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. அவர்களை மே மாதம் வரை நீதிமன்றம் கண்காணிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கால இடைவெளியை மூன்று தடவை நீட்டிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

துருக்கியில் இதுவரை 61 ஆயிரத்து 49 பேர் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஆயிரத்து 296 பேர் இறந்துள்ளனர். 3 ஆயிரத்து 957 பேர் குணமடைந்துள்ளனர்.

துருக்கியில் 79 சிறை ஊழியர்களுக்கும் 17 சிறைக் கைதிகளுக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் வடகொரியா ஏவுகணைச் சோதனை

கிழக்கு கடற்கரை பகுதியில் அடையாளம் தெரியாத ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தியுள்ளதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் கிழக்குப் பகுதி நகரமான மன்சோன்னில் உள்ள கடல் பகுதியில் ஏவுகணை சோதனையை காலை 7 மணியளவில் நடத்தியது. வடகொரியா ஏவிய ஏவுகணை 150 கிலோ மீட்டர் தூரம் சென்ற பின்னர் நீரில் விழுந்தது என்று தென் கொரிய அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் வுஹான் நகரிலிருந்து பரவிய கொரோனா வைரஸ் 210க்கு மேற்பட்ட உலக நாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இதுவரையில், வடகொரியால் கொரோனா வைரஸ் பரவியதா? கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டதா? பலி எண் ணிக்கை என்ன என்பது குறித்து எந்தத் தகவலும் இல்லை.

வடகொரிய அரசும் இதுவரை கரோனா வைரஸ் பற்றி எந்த அதிகாரப்பூர்வ தகவலும் தெரிவிக்காத நிலையில் தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ளது.

வடகொரியாவின் அண்டை நாடான, தென் கொரியாவில் 10 ஆயிரத்த 564 பேர் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். 222 பேர் உயிரிழந்துள்ளனர்.

## 2 ஆயிரம் பேருக்கு தென்னாபிரிக்காவில் கொரோனா தொற்று

தென் ஆப்பிரிக்காவில் கொரோனா வைரஸ் பாதிப்பு எண்ணிக்கை 2 ஆயிரத்து 173 ஆக அதிகரித்துள்ளது. தொடர்ந்து தொற்று அதிகரித்து வருகின்றது.

அடிப்படைச் சுகாதார வசதிகள் மற்றும் சுகாதாரக் கட்டுமானங்கள் குறைவாக இருக்கின்ற நிலையிலும் ஆபிரிக்க நாடுகளில் கொரோனா பரவல் வீதம் மிக மெதுவானதாக இருக்கின்ற போதும் தென்னாபிரிக்காவில் அதன் பரவல் வேகம் அதிகரித்திருப்பது கவலையை அதிகப்படுத்தியுள்ளது.

தென் ஆப்பிரிக்காவில் கடந்த 24 மணிநேரத்தில் நூற்றுக்கும் அதிகமானவர்களுக்கு கொரோனா தொற்று உறுதியானது. இதனைத் தொடர்ந்து தென் ஆப்பிரிக்காவில் கரோனா தொற்று எண்ணிக்கை 2 ஆயிரத்து 173 ஆக அதிகரித்துள்ளது என்று இதுகுறித்து தென் ஆப்பிரிக்க சுகாதாரத் துறை அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 80 ஆயிரத்து 85 கொரோனா வைரஸ் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், பொது ஆய்வகங்களில் நடத்தும் சோதனைகளை அதிகரிக்க இருப்பதாகவும் தென் ஆபிரிக்க அரசு தெரிவித்துள்ளது.

## 19 லட்சத்து 23 ஆயிரம் இதுவரையான தொற்று

கொரோனா வைரஸுக்கு இதுவரை உலகம் முழுவதும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள். நேற்று ஒரே நாளில் 5 ஆயிரத்து 423 பேர் உயிரிழுந்தனர். 19 லட்சத்து 23 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 4 லட்சத்து 57 ஆயிரம் பேர் குணமாகி வீடு திரும்பியுள்ளனர்.

கடந்த 7ஆம் திகதி அதிகபட்சமாக ஒரே நாளில் 7 ஆயிரத்து 300 பேர் உயிரிழுந்திருந்தனர்.

நேற்று அமெரிக்காவில் தான் அதிகமானோர் உயிரிழந்தனர். அங்கு ஆயிரத்து 535 பேர் மரணமானார்கள். இதேபோல் இங்கிலாந் தில் 717 பேரும், பிரான்சில் 574 பேரும், இத்தாலியில் 566 பேரும், ஸ்பெயினில் 547 பேரும், பெல்ஜியத்தில் 303 பேரும் இறந்துள்ளனர்.

மேலும் 71 ஆயிரம் பேருக்கு நேற்று மட்டும் புதிதாக வைரஸ் பாதிப்பிருப்பது தெரியவந்தது. இதனால் பாதிப்பு எண்ணிக்கை 19 லட்சத்து 23 ஆயிரமாக உயர்ந்து இருக்கிறது.

கொரோனா வைரசால் அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணம் கடும் பாதிப்பை சந்தித்து வருகிறது. புகழ் பெற்ற நியூயோர்க் நகரம் கொரோனா தொற்றின் மையப் புள்ளியாக மாறி உள்ளது. அந்த நகரத்தில் மட்டும் ஒரு லட்சத்து 4 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு இருக் கிறார்கள். 6 ஆயிரத்து 900 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

நியூயோர்க் நகரம் பாதிப்பு எண்ணிக்கையில் சீனா, இங்கிலாந்து நாடுகளையே முந்தி இருக்கிறது.

## ஊரடங்கை நீக்குவதற்கு ஆஸ்திரேலியா மறுப்பு

ஆஸ்திரேலியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் தீவிரம் குறைந்துள்ள நிலையில், ஊரடங்குக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

ஆனால் தற்போதைய சூழலில் ஊரடங்கு கட்டுப்பாட்டைத் தளர்த்த முடியாது என்று ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் கொரோனோ தொற்று தீவிரம் தற்போது குறைந்துள்ளமையால். கொரோனா பரவலைத் தடுக்கும் விதமாக மக்கள் கூடுவதற்கும் பயணங்களுக்கும் அந்த நாட்டு அரசு கட்டுப்பாடுகள் விதித்தது.

கொரோனா தொற்று தீவிரம் குறைந்துள்ளது, எனவே கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும் என்று அந்நாட்டு மக்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் அவர்களின் கோரிக்கையை ஆஸ்திரேலிய அரசு ஏற்கவில்லை.

இதுகுறித்து ஆஸ்திரேலியப் பிரமதர் ஸ்காட் மோரிசன் கூறுகையில், ”கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் சூழலை நாம் அடைவதற்கு இன்னும் பல வாரங்கள் இருக்கின்றன. தற்போதைய சூழலில் மிகுந்த பொறுமை அவசியம்.

சிங்கப்பூர், தென்கொரியா போன்ற நாடுகள் அங்கு கரோனா தொற்று எண்ணிக்கை குறைந்ததும் ஊரடங்கு கட்டுப்பாட்டைத் தளர்த்தின. ஆனால் அதன் பிறகு மீண்டும் கொரோனா தொற்று ஏற்படத் தொடங்கியது. எனவே, முழுமையான அளவில் கரோனா பாதிப்பு நீங்கும் வரையில் ஊரடங்கு கட்டுப்பாட்டைத் தொடர்வது அவசியம்” என்று தெரிவித்தார்.

கடந்த இரு தினங்களில் ஆஸ்திரேலியாவில் புதிதாக 63 நபர்களுக்கு மட்டுமே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவில் 2.5 கோடி மக்கள்தொகையில் 6 ஆயிரத்து 400 நபர்களுக்கு கரோனா தொற்று ஏற்பட்டிருக்கிறது. அதில் 3 ஆயிரத்து 598 பேர் குணமாகியுள்ளனர். 61 பேர் உயிரிழந்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikathir





# பாதுகாப்புத் தேடுவதில் தொடங்கிய இந்த யுகம் முகமூடிகளின் யுகம்தான்!

இது முகமூடிகளின் யுகம். மனிதர்கள் முகத்தை மூடிக் கொண்டு திரிகின்ற காலம். முகமூடிகளுக்குப் பின்னால், பாதுகாப்புத் தேடுவதில் தொடங்கிய இந்த யுகம், அதற்குப் பின்னால் அரசியல் நடத்துவது, நிழல் போரில் ஈடுபடுவது வரை சென்றிருக்கிறது.

முகமூடிகளுக்காக உலக வல்லரசுகள் இப்போது போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ளவும் தயாராக இருக்கின்றன.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து, கடந்த மார்ச் மாதம் வரைக்கும், மூன்றாவது உலகப் போர் ஒன்று மூண்டால் அது நீருக்கானதாகவே இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுக் கொண்டிருந்தது.

ஏனென்றால், இயற்கை பேரழிவுகளால், மழை வளம் குறைந்து கொண்டே போனது. இதனால் நீர் வளம் உலகில் குறைந்து கொண்டிருந்தது. இதனால், நீருக்கான சண்டை மனிதர்களுக்கிடையில் தொடங்கி நாடுகளுக்கு இடையிலான போராக மாறி, மூன்றாம் உலகப் போர் வெடிக்கக் கூடிய ஆபத்து இருப்பதாக, அறிஞர்கள் பலரும் கூறி வந்தனர்.

ஆனால், கடந்த சில வாரங்களில் உலகத்தில் ஏற்பட்டுள்ள சடுதியான மாற்றங்கள், மூன்றாம் உலகப் போர், முகமூடிகளுக்காக வெடித்தாலும் ஆச்சரியம் இல்லை என்ற நிலையை உருவாக்கியுள்ளது. இன்றைய நிலையில், உலகின் மிகப் பெறுமதிவாய்ந்த உலோகங்கள், மூலப் பொருள்கள் எல்லாமே பெறுமதியை இழந்து கொண்டிருக்கின்றன.

தங்கத்தின் மீதான முதலீடு சரிந்து கொண்டிருக்கிறது. மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சி கண்டு வருகிறது. இவற்றின் தேவைகள் குறைந்து போனமை மாத்திரமல்ல, இவற்றின் பெறுமானம் சரிந்து வருவதும் தான் அதற்குக் காரணம்.

இன்றைய நிலையில், முகமூடிகளும் (Face mask), கையுறைகளும் (gloves) தொற்றுநீக்கிகளும் (sanitizer), செயற்கை சுவாச கருவிகளும் (ventilator), ஹைறொக்சிகுளோரோயின் மாத்திரைகளும் (hydroxychloroquine) தான் உலகில் அவசியமானவையாக மாறியிருக்கின்றன.

இவற்றுக்குத் தான் இன்று மதிப்பு அதிகம். இவற்றைத் தேடித்தான் உலகம் இன்று அலைந்து கொண்டிருக்கிறது. அணுகுண்டுகளை உருவாக்குவதற்காக யுரேனியத்தை தேடிக் கொண்டிருந்த நாடுகளும், முதலீடுகளைச் செய்து சுரண்டுவதற்காக மூன்றாம் உலக நாடுகளை தேடிக் கொண்டிருந்த நாடுகளும், தமது பொருளாதார நலன்களுக்கான பிற நாடுகளை சிதைத்து சின்னாபின்னமாக்கிக் கொண்டிருந்த நாடுகளும் இப்போது முகமூடிகளுக்காகவும், கையுறைகளுக்காகவும், செயற்கை சுவாசக் கருவிகளுக்காகவும், தொற்று நீக்கிகளுக்காகவும், ஹைறொக்சிகுளோரோயின் மாத்திரைகளுக்காகவும் ஓடிக் கொண்டிருக்கின்றன.

> முகமூடிகளுக்காகவும், ஏனைய மருத்துவ கருவிகள், மருந்துகளுக்காகவும், அமெரிக்கா இப்போது தனது நட்பு நாடுகளைக் கூடி வெட்டி விடத் தயாராக இருக்கிறது. அவற்றுடன் போட்டி போடுகிறது. அவற்றுடன் முட்டி மோதுவதற்கும் எத்தனிக்கிறது.

இப்போது உலகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸ் என்ற கிருமி தான், இதற்குக் காரணம். இந்த கொரோனா வைரஸ் உலகத்தின் ஓட்டத்தையே மாற்றி விட்டது. புதிய உலக ஒழுங்கு ஒன்றுக்கான அடிக்கல்லையும் கூட நாட்டி விட்டது. இந்த தொற்றினால், சாதாரணமாக மருந்துக் கடைகளில் நான்கு ஐந்து ரூபாவுக்குக் கிடைத்துக் கொண்டிருந்த முகமூடிகளுக்கு, இன்று நூற்றுக்கணக்காக ரூபாவைக் கொடுப்பதற்கு, மக்களும், நாடுகளும் தயாராக இருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

உலகச் சந்தையில் முகமூடிகளை அதிக அளவில் ஏற்றுமதி செய்து வந்த சீனாவே இன்று கொரோனா வைரஸ் கிருமிகளையும் உலகத்துக்கு கொடுத்துள்ளது. அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகளுடன் போட்டி போட்டுக் கொண்டிருந்த சீனாவும், சீனாவை பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைந்து விடாமல் தடுக்க முயன்று கொண்டிருந்த அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும், கொரோனா வினால், குழப்பமடைந்து போயிருக்கின்றன.


சீனாவை உலுப்பி எடுத்த கொரோனா வைரஸ், இப்போது, அமெரிக்காவுக்கும் அதன் நேசநாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், போன்றவற்றுக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியிருக்கிறது. இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் பெரிதும் திணறிக் கொண்டிருக்கின்றன. உலகின் முதல் நிலை வல்லரசாக கணிக்கப்பட்ட அமெரிக்காவின் சுகாதார மற்றும் மருத்துவ வசதிகள் எந்தளவுக்கு பலவீனமான நிலையில் இருக்கின்றன என்பதை இந்த கொரோனா வைரஸ் உணர்த்தியிருக்கிறது.

அமெரிக்கா இப்போது தனது நாட்டின் மக்களை காப்பாற்றுவதற்காக தனது நலன்களை மாத்திரம், உறுதிப்பத்திக் கொள்வதற்காக, தனது நேசநாடுகளுடன் மோதுவதற்கும் தயாராகியுள்ளது.

3 எம் முகமூடிகளை வெளிநாடுகளுக்கு விற்க அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் விதித்த தடையினால், கனடா எரிச்சலடைந்தது. அமெரிக்காவின் செய்கையினால் எப்போதும் அதற்குத் துணையாக இருந்த கனடாவுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. கனடாவில் இருந்து கிளம்பிய கடுமையான எதிர்ப்புகளை அடுத்து, இந்த முகமூடிகளை கனடாவுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்திருக்கிறது ட்ரம்ப் நிர்வாகம்.

அதேவேளை, சீனாவில் இருந்து பிரான்ஸுக்கு அனுப்பப்படவிருந்த முகமூடிகளை கூடிய விலையைக் கொடுத்து, அமெரிக்கா தனது நாட்டுக்குத் திருப்பி விட்டுள்ளது. இதனால் கொத்துக் கொத்தாக செத்துக் கொண்டிருக்கும் பிரான்ஸ் மக்களுக்கு அவசியமான முகமூடிகள் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது





முகமூடிகளுக்காகவும், ஏனைய மருத்துவ கருவிகள், மருந்துகளுக்காகவும், அமெரிக்கா இப்போது தனது நட்பு நாடுகளைக் கூடி வெட்டி விடத் தயாராக இருக்கிறது. அவற்றுடன் போட்டி போடுகிறது. அவற்றுடன் முட்டி மோதுவதற்கும் எத்தனிக்கிறது. இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவை எதிர்கொள்வதற்கு வசதியாக, இந்தியாவை தனது கைக்குள் போட்டுக் கொள்ள அமெரிக்கா பெரும் பாடு பட வேண்டியிருந்தது. அவ்வாறான இந்தியாவிடம், ஹைறொக்சிகுளோரோயின் மருந்துகளை தராவிட்டால், விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரித்திருந்தார் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்.

அந்தளவுக்கு அமெரிக்கா இப்போது முகமூடிகளுக்காகவும், தொற்று நீக்கிகளுக்காகவும், மருந்துப் பொருள்களுக்காகவும் நேசநாடுகளைப் பகைத்துக் கொள்ளவும், அவற்றை மிரட்டி அச்சுறுத்தவும் தயாராக இருக்கிறது.

அமெரிக்காவின் உலக வல்லரசு நிலையை இந்த முகமூடிகள் கேள்விக்குட்படுத்தியிருக்கின்றன. தனது நாட்டுக்குத் தேவையான முகமூடிகளையும், மருந்துகளையும் கூட உற்பத்தி செய்ய முடியாத நிலையில்தானா அமெரிக்கா இருந்திருக்கிறது, தனது நாட்டு மக்களை பேரிடர் ஒன்றில் இருந்து காப்பாற்றத் தேவையான மருத்துவ வசதிகள் இல்லாத நிலையில் தானா, உலகப் பெரும் வல்லரசு இருந்திருக்கிறது என்ற கேள்வி இப்போது உலகமெங்கும் எழுப்பப்படுகிறது.

இந்தக் கேள்வி அமெரிக்காவுக்கு அவமானத்தை மாத்திரம் கொடுக்கவில்லை. அதன் வல்லரசுத் திறன் மீதும் கேள்வியை எழுப்பியிருக்கிறது. தனியே ஆயுதங்களாலும் பொருளாதார பலத்தினாலும் மாத்திரம் உலகப் பெரும் வல்லரசாக கணிக்கப்பட்ட அமெரிக்காவுக்கு, அதன் உண்மை விம்பம் எப்படிப்பட்டது என்பதை இந்த முகமூடி யுகம்தான் எடுத்துக் காட்டியிருக்கிறது.

எனவே, இந்த முகமூடி யுகம், முடிவுக்கு வரும் போது, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் தமது முன்னைய கோட்பாடுகளையும், உத்திகளையும் மாற்றியமைக்கும் முடிவுக்கு வருவது தவிர்க்க முடியாததாகவே இருக்கப் போகிறது

நன்றி:-தமிழ்வின்

# வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாமம்

## அருள்ஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576



# கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

**யாழ்ப்பாணம்**
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550

கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்



★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

**தலைமைக் காரியாலயம்**
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை



# SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE

உலகெங்குமிருந்து

உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.

உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.

No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி



மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்



படம் 1

இந்த மூன்று சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு – 'கடற்கரை'

**படம் 1**
அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

**படம் 2**
எவ். ஹுமைரா – தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்



படம் 2

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'வயல் வெளி எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் -தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எம். எஸ். முகம்மட் பாரிக் - தரம் 3
கமு/ சது மகளிர் வித்தியாலயம் - சம்மாந்துறை

எவ். லீனா
கிட்ஸ்வே ஆரம்பப் பாடசாலை, கல்கமுவ

எஸ். எம். அபாஸ் அஹமட்
அல் ஹிக்மா பாலர் பாடசாலை, மதவாக்குளம்

ஏ. எஸ். எவ். மனால் - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

அக்ஷா கீர்த்திராஜ் - தரம் 4
ஹட்டன் ஹைலாண்ட் கல்லூரி

எம். எஸ். முகம்மட் கைஸ் - தரம் 1
கமு/ சது மகளிர் வித்தியாலயம் - சம்மாந்துறை

பிரபாகர் அபிஜித் - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் - தரம் 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

டேவிராஜ் பிலெஷின் - தரம் 6
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

பாசனா ஹர்ஷன் - தரம் 7
யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

சுபானந்தன் அஷ்வின் - தரம் 2
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

லோ. சிவயாணு - தரம் 7
யா/ இந்து மகளிர் கல்லூரி

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

ஆதிரை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

ஆயிலை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

ஜெயசாந்தன் வித்யாசாகர் - தரம் 2
யாழ். பரியோவான் கல்லூரி

த. சம்யுக்தா - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி




# கொரோனாவுக்குப் பலியாகுகின்ற முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதியுங்கள்

## அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபை ஜனாதிபதியிடம் வலியுறுத்தல்

கொழும்பு, ஏப்.15

உலக சுகாதார ஸ்தாபனம் கொரோனா நோயினால் மரணிப்போரை அடக்கவும் முடியும், எரிக்கவும் முடியுமென இரு தெரிவுகளை வழங்கியுள்ள நிலையில், இலங்கையிலும் கொரோனா வைரஸால் மரணிக்கின்ற முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய உதவுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபை வலியுறுத்திக் கேட்டுள்ளது.

இது விடயமாக மேற்படி சபையின் தலைவர் அஷ்யெய்க் எஸ்.எச்.ஆதம்பாவா மதனி, செயலாளர் அஷ்யெய்க் ஏ.எல். நாஸிர்கனி ஆகியோர் நேற்று செவ்வாய்க்கிழமை கூட்டாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தற்போது சர்வதேச நாடுகளில் மிக வேகமாக பரவி வரும் கொரோனா வைரஸ் இலங்கை திருநாட்டையும் விட்டுவைக்கவில்லை. இந்நோயைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை அரசு காட்டிவரும் அசுர வேகத்தை அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா வெகுவாக பாராட்டுகின்றது. அரசாங்கத்துடன் இணைந்து பாதுகாப்புப் படையினரும் சுகாதாரத் துறைப் பணியாளர்களும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றமை போற்றத்தக்க, விலை மதிப்பற்ற செயற்பாடாகும்.

இலங்கைத் திருநாடு, அந்நாட்டில் வாழும் சகல சமயத்தவரையும், சமூகங்களையும் கண்ணியத்துடன் நடத்திவரும் பாரம்பரியமிக்க நாடாகும். முஸ்லிம்கள் புராதன காலம் தொட்டு அவர்களது சமய நம்பிக்கைகளையும், வழிபாடுகளையும் எவ்வித தங்குதடையுமின்றி மிகச் சிறப்பாக இந்நாட்டில் பேணி வருகின்றனர். எந்த அரசும் அரசாங்கமும் ஒருபோதும் அதற்குத் தடையாக இருந்ததில்லை.

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் இதுவரை மூன்று முஸ்லிம்கள் இறந்துள்ளனர். அவர்கள் தங்களது சமய நம்பிக்கை, சடங்கு, சம்பிரதாயங்களுக்கு அப்பால் எரிக்கப்பட்டு தகனம் செய்யப்பட்டுள்ளனர்.

உண்மையில் இச் செயற்பாடு இந்நாட்டிலுள்ள சகல முஸ்லிம்களதும் மனங்களையும் உணர்வுகளையும் மிகக் கடுமையாக பாதித்துள்ளது. இதனால் அரசாங்கத்தின் மீது பாரதூரமான அதிருப்தியையும், நம்பிக்கையீனத்தையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

உலக சுகாதார ஸ்தாபனம் கொரோனா போன்ற கொடிய நோயினால் மரணிப்போரை அடக்கவும் முடியும், எரிக்கவும் முடியுமென இரு தெரிவுகளை வழங்கியுள்ள நிலையில் சர்வதேச அளவில் 180 நாடுகள் அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளன.

இச்சூழ்நிலையில் இலங்கை ஜனாதிபதி இந்நாட்டில் வாழும் சகல சமயத்தவர்களினதும், சமூகங்களினதும் தனித்துவத்தையும், நம்பிக்கையையும், உணர்வுகளையும் மதிக்க வேண்டுமெனவும், கொரோனா போன்ற வைரஸ் தாக் கத்தினால் மரணிக்கும் முஸ்லிம்களது உடல்களை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டுமெனவும் மன்றாடிக் கேட்டுக் கொள்கின்றோம். – என்று உள்ளது.

# வருடப் பிறப்பு இரவு மது விருந்து வாள்வெட்டுக் கொலையில் முடிவு

## கெப்பற்றிக்கொலாவயில் சம்பவம்

கெப்பற்றிக்கொலாவ பகுதியில் புத்தாண்டு பிறந்த நாளான நேற்றுதினம் இரவு இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றின் போது ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையுண்டவரின் அண்ணன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:–

புத்தாண்டு தினமான திங்கள்கிழமை மாலை அநுராதபுரம், கெப்பற்றிக்கொலவா பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மது விருந்துக் கொண்டாட்டம் இடம்பெற்றுள்ளது. இதன்போது அதிக சத்தம் காரணமாக அயல் வீட்டுக்காரர் மது விருந்தில் ஈடுபட்டவர்களை அமைதியாக இருக்குமாறு கோரியுள்ளார்.

இதன்போது ஏற்பட்ட வாய்தர்க்கம் கைகலப்பாக மாறியுள்ளது. இதில் அயல் வீட்டைச் சேர்ந்த 24 வயதுடைய ஜெ.செலிட்டர் என்பவர் வாள்வெட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். கைகலப் பைத் தடுக்கச் சென்ற அவரின் அண்ணனான 34 வயதுடைய ஜெ.விஜயசுந்தரம் என்பவர் காயமடைந்த நிலை யில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கைகலப்பு சம்பவம் தொடர்பில் சந் தேகத்தில் இருவத் கைது செய்யப்பட்டுள்ளனர். கெப்பற்றி பொலவ பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மோ.சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதல் வவுனியா பூவரசங்குளத்தில் பூசகர் மரணம்

வவுனியா – பூவரசங்குளம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மணியர்குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் மணியர்குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியுள்ளன.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 34 வயது மதிக்கத்தக்க ஆலய பூசகர் ஒருவர் மரணமடைந்துள்ளார். மற்ற நபர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் பூவரசங்குளம் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




## காலைக்கதிர் Kalaikathir

# கடற்கரை



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது

### தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

### இன்று (15/04/2020) தலைப்பு கடற்கரை

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.04.2020 இல் வெளியிடப்பெற்றது.